# நீதிவெண்பா

குறுவினாக்கள்.

1.செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

- அருளைப் பெருக்கி அறிவைச் சீராக்குவோம் !
- மயக்கம் அகற்றி அறிவைத் தெளிவாக்குவோம் !
- உயிருக்கு அரிய துணை கல்வியே! கல்வியைப் போற்றிக் கற்போம் ! கற்போம் !

2.சதாவதானம் என்றால் என்ன?

'சதம்' என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.

3.கல்வியை எவ்வாறு போற்றிக் கற்க வேண்டும் என செய்குத்தம்பி பாவலர் கூறுகிறார்?

- அருளினைப் பெருக்கி. அறிவைச் சீராக்கி
- மயக்கம் அகற்றி
- அறிவுக்குத் தெளிவு தந்து
- உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே. எனவே அதைப் போற்றிக் கற்க வேண்டும்.

4.செய்குதம்பி பாவலர் குறிப்பு வரைக.

பெயர்: கா.ப.செய்குதம்பி பாவலர்

ஊர்: இடலாக்குடி (கன்னியாகுமரி மாவட்டம்)

காலம்: 1874-1950

பிற படைப்புகள்: கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ், அழகப்பாக் கோவை, சீறாப்புராணத்திற்கான உரை நூல் மற்றும் சில நாடக நூல்கள்.

சிறப்புகள்: 15 வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்றிருந்தார். 1907 மார்ச் 10 ஆம் நாளில் விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை செய்து காட்டி 'சதாவதானி' என்ற பட்டத்தைப் பெற்றார்.

தமிழக அரசு செய்த சிறப்புகள்: இடலாக்குடியில் மணிமண்டபமும், பள்ளி ஒன்றும் கட்டடப்பட்டுள்ளது.நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

நடுவண் அரசு செய்த சிறப்பு:

2008 டிசம்பர் 31 அன்று இவர் உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டது.